கிறார்கள். இம்மாதிரி எழுதப்பட்ட குறிப்புகள்மீது பஞ்சாயத்து யூனியன்கள் நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றன. அம்மாதிரி குறிப்புகள்மீது நடவடிக்கை கண்டிப்பாக எடுப்பதற்கு ஒரு உத்தரவை அரசு தரப்பிலிருந்து பிறப்பித்து, வரவு-செலவைக் கணிக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி: அப்படி எழுதப்படுகிற குறிப்புகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கவனத்திற்கு சுட்டிக்காட்டப்பட்டதனுடைய அடிப்படையில் விரைவாக அவைகளை முடிவு செய்து அரசாங்கத்திற்கு அறிக்கைத் தரவேண்டுமென்றும் குறைகள் நிவாத்திக்கப்படவேண்டுமென்றும் அவ்வப்போது கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

Collection bonus system

* 367 Q.—THIRU S. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether collection bonus system has been introduced in the State Transport Department; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனர்: (அ) இல்லை. (இ) இவ் வினாவுக்கு இடம் இல்லை.

திரு. கே. விநயகம்: தேசியமயமாக்கிய இந்தத் துறையிலே போதிய அளவுக்கு நமக்கு வரவேண்டிய வருவாய் வருவதில்லையென்று குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். அதே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா, அரசாங்கப் போக்குவரத்துத் துறையில் வசூல் பூரிப்பூதியம் வழங்கும் திட்டம் பற்றியது.

திரு. கே. விநயகம்: அதற்குத்தான் வருகிறேன். 'ஐ எம் கமிங் டு தி பாயின்ட்'. மற்றவர்கள், தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்கள். அவர்களுக்கு அதிகமாக 'கலெக்ஷன்' வருகிறது. நமது பஸ்கள் போகிற இடத்திலே 'கலெக்ஷன்' வராமல் இருக்கிறது. அதற்காகத்தான், ஊக்கப்படுத்துவதற்குத்தான் 'போனஸ்' தரலாம் என்ற ஆலோசனையை எதிர்க்கட்சிக்காரர்களும், ஆளும் கட்சிக்காரர்களும் சொன்னார்கள். இது அமுலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டிருக்கும்போது என் கைவிடப்பட்டது? புதிதாக வந்திருக்கிற அமைச்சரவர்கள், இதை யோசித்து ஆரம்பித்துப் பார்த்து, நல்ல முறை என்று ஏற்றுக்கொண்டு, அமுல்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தமிழக அரசுக்கு போக்குவரத்துத் துறையில் இழப்பு ஏற்பட்டு வருகிறது என்பது உண்மை. ஆனால் இந்த ஊக்க போனஸ் கொடுப்பதில் பற்பல சிக்கல்கள், பிரச்னைகள் ஏற்படுகின்றன. முதலாவது, ஊக்க போனஸ் கொடுப்பது என்றால் வசூல் செய்கிற கண்டக்டருக்கு மட்டும் கொடுப்பதா, டிரைவருக்கும் சேர்த்து கொடுப்பதா என்ற சிக்கல் இருக்கிறது. இரண்டாவது, வசூல் தொகையின் அடிப்படையில் கொடுப்பதா, அல்லது எத்தனை டிக்கட்டுகள் விற்கப்பட்டன என்ற அடிப்படையில் கொடுப்பதா என்ற சிக்கலும் இருக்கிறது. வசூல் அடிப்படையில் கொடுப்பதானால், நாள்படி வசூலில் கொடுப்பதா, வாரப்படி வசூலில் கொடுப்பதா, மாதப்படி வசூலில் கொடுப்பதா என்ற சிக்கல் இருக்கிறது. நாள்படி வசூலில் கொடுக்கலாம் என்றால் செவ்வாய்க்கிழமை வசூல் குறைவாக இருக்கிறது. வாரத்தின் அடிப்படை

1969 மார்ச் 17]

யில் என்ருல் மாதத்தின் முதல் வாரத்தில் அதிகமாக வசூல் ஆகிறது, கடைசி வாரத்தில் குறைவாக இருக்கிறது. மாதத்தின் அடிப்படையில், விழாக் காலங்களிலும், திருமணக் காலங்களிலும் வசூல் அதிகமாக இருக்கிறது. இப்படியெல்லாம் பற்பல சிக்கல்கள் இருப்பதன் காரணமாக, இவைகளை ஆராய்வதற்கும், போக்குவரத்து துறையிலே ஏற்படுகின்ற இழப்பை சரிபடுத்துவதற்கும், அதேசமயம் ஊழியர்களை ஊக்குவிப்பதற்கும் ஆன வழிவகைகளை ஆராய்வதற்காக, மேல்மட்டக் குழு உயர் திரு சோமசுந்தரம் அவர்களுடைய தலைமையிலே அமைந்திருக்கிறது. ஆனல் ஒன்றைமட்டும், நமது எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஊக்க போனஸ் என்ற முறை பம்டாயிலுள்ள போககுவரத்துத் துறையில் சோதனையாக அமுல்படுத்தப்பட்டு, அது வெற்றிகரமாக இல்லையென்று கைவிடப்பட்டுள்ளது.

கூட்டுறவு நிறுவனங்களின் கணக்குகள்

*368—விஞ திரு. கே. போஜன்: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிறுவனங்களின் கணக்குகளைத் தனியார்துறைத தணிக்கையாளர்களைக் கொண்டு தணிக்கை செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: கூட்டுறவு நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் பொறுப்பு அரசைச் சேர்ந்தது. என்ருலும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், நூற்பு ஆலைகள் இவைகளின் கணக்குகளை தனியார் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களைக் கொண்டு தணிக்கை செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதி 1967-ம ஆண்டு மார்ச் மாதம 2-ம் நாள். அந்த ஆணை எண் 824.

DR. H. V. HANDE: Does this Government feel that it is much cheaper to have this audit done by private agencies? Is it a fact that there is greater independence if independent agencies audit? What are the reasons for the issue of this order? Is this Government going to ratify it?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: முந்திய அரசு பிறப்பித்த அந்த ஆணை நல்லெண்ணத்தின அடிப்படையிலே பிறப்பிக்கப்பட்டது என்பதை, மறைந்த முன்னுள் முதல்வரின் அரசும், அதற்குப் பின்னல் வந்த இப்பொழுதுள்ள அரசும் எற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனல், தணிக்கை முறைகளை நன்ருக ஆராய வேண்டியிருக்கிறது என்ற காரணத்திற்காக கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த பெரிய நிறுவனங்களின் கணக்குகளையும் குறிப்பாக நூற்பாலைகளின் கணக்குகளையும் சர்க்கரை ஆலைகளுடைய கணக்குகளையும் தணிக்கை செய்வதற்கு இப்போதுள்ள முறைகளைத் திருத்தி அமைக்கவேண்டுமா என்பதை உயர்திரு சந்தானம் அவர்களுடைய தலைமையில் உள்ள குழு ஆராய்ந்துள்ளது.

திரு. எம். சுரேந்திரன்: கேள்வி எண் 367-க்கு ஒரு சப்ளிமெண்டரி கேள்விகூட அனுமதிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது அடுத்த கேள்விக்குப் போயாகிவிட்டது. இப்பொழுது வரப்போகின்ற மானியக் கோரிக்கையில் அதைப்பற்றிப் பேசிக்கொள்ளலாம். நேரம் ஆகிவிட்டது.

திரு. சி. கோவிந்தராசன்: தணிக்கை செய்யக்கூடிய முறை அந்தந்த இலாகாவிலிருந்து கூடாது, அதற்குப் பதிலாக மாநில ஆடிட்டர் ஜெனரலினகீழ் ஆடிட் நடப்பதுதான் நல்லது. நிதியமைச்சர் அவர்கள் இறுதி ஆடிட், மாநில ஆடிட்டர் ஜெனரல் கீழ்தான் நடைபெறுகிறது என்று